**O.S. 98/2019, 16.11.2021, 12.55 pm - 01.00 pm**

**வா.சா.2, பலராமன், த/பெ.அப்புனு**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி தான் அவருக்கு சாதகமாக சாட்சியமளிக்க என்னை அழைத்து வந்தார் என்றால் சாதகமாக சாட்சியம் அளிக்க அழைத்து வரவில்லை, இருப்பதை சொல்வதை அழைத்து வந்தார். எதற்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் 65,000/- ரூபாய் அடமான பதிவு செய்துள்ளதாக தாக்கல் செய்துள்ளார். அடமானம் யாருக்கு போட்டார் என்றால் தெரியாது. எதை அடமானம் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியும், அவருடைய சொத்தான 50 செண்ட் நிலத்தை அடமானம் செய்தார். சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண்.106/1F ஆகும். என்னுடைய சொத்திற்கு அருகாமையில் வாதியின் சொத்து உள்ளது என்றால் சரியல்ல, கொஞ்சம் அருகாமையில் உள்ளது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு பக்கத்தில் என்னுடைய சொத்து உள்ளது என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான், கொஞ்சம் தூரத்தில் உள்ளது. வாதி அடமானம் செய்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. அடமானம் போடும்பொழுது என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து வந்தாரா என்றால் இல்லை. வாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் தான் செய்கிறேன், முன்பு டிராக்டர் வைத்திருந்தேன், வாதியின் நிலத்தில் நான் ஏர் ஓட்டி கொடுப்பேன். வாதியிடம் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் சரியல்ல, நண்பர் என்ற முறையில் தெரியும். 1ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதியின் நிலத்திற்கு ஏர் ஓட்டி அதனடிப்படையில் பணம் வாங்குவதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றும், அவருக்கு சாதகமாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.